# சிங்கள மொழி பேசும் மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரண்டாம் மொழியாக தமிழ் மொழியைப் பயன்படுத்தும் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள்

**ஆரபி.க., விமல்.சா.**

மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

arabiganeshanathan@gmail.com

*இலங்கை மும்மொழி பேசுகின்ற மக்களைக் கொண்ட நாடாகும். யாழ்ப்பாணப் பிரதேசமானது தமிழர் அதிகம் வாழும் பிரதேசமாகக் காணப்படுவதனால் இங்கு தமிழ் மொழியே அதிகம் பயன்பாட்டில் உள்ளது. இங்கு காணப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் தமிழ் மொழி பேசும் மக்கள் சமூகத்தைக் கொண்டதாகும். இங்கு கல்வி பயில்வோர் தமிழ் மற்றும் சிங்கள மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களாவார். இவர்கள் இருவரும் சேர்ந்து கல்வி பயிலும் துறைகளில் இவர்களுக்கான மொழி மூலம் ஆங்கிலமாகும். சிங்கள மொழியை தாய் மொழியாக கொண்டவர்களுக்கு விரிவுரைகள் தவிர்ந்த நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உட்சூழலிலும், வெளிச்சூழலிலும் தங்களுடைய தேவைகளையும், உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்கு தமிழ் மொழியைப் பயன்படுத்த வேண்டிய தேவையே காணப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தமிழ் மொழியைப் பயன்படுத்தும் போது இவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் ஆய்வுப் பிரச்சினையாகும். இவ்வாறான பிரச்சினைகளை மொழியியல் ரீதியாக ஆய்வு செய்வதே ஆய்வின் நோக்கமாகும். சிங்கள மொழியை தாய் மொழியாக கொண்டவர்கள் இரண்டாம் மொழியாக தமிழ் மொழியை பயன்படுத்திக்கொள்ளும் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விளக்கமாக ஆய்வு செய்வதால் இது விளக்கமுறை ஆய்வுப்பிரிவில் அடங்குகின்றது. மேலும் ஆய்வு தொடர்பான தரவுகளானவை நூல்கள், சஞ்சிகைகளில் இருந்தும் நேர்காணல், கலந்துரையாடல், ஒலி, ஒளிப்பதிவுகள் போன்றவற்றின் மூலமாகவும் பெறப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் சிங்கள மொழியை தாய் மொழியாக கொண்டவர்கள் இரண்டாம் மொழியாக தமிழ் மொழியை பயன்படுத்தும் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளக் கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் இரண்டாம் மொழி கற்றல் கற்பித்தலுக்கும் இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகள் உறுதுணையாக அமையலாம்.*

**திறவுச் சொற்கள் :** தாய்மொழி, இரண்டாம் மொழி, தமிழ் மொழி, சிங்கள மொழி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்